# மெட்ரோ பயணியருக்கு சுற்றுலா கார்டு அறிமுகம்

– நமது நிருபர் –



மெட்ரோ ரயில் பயணியருக்கு, புதிய மாதாந்திர சுற்றுலா கார்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையில், விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப் படுகிறது. இந்த ரயில் போக்குவரத்தில், பயணியர் வருகையை அதிகரிக்க, நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மெட்ரோ ரயிலில் பயணம் செய்ய, டோக்கன், டிராவல் கார்டு, ட்ரிப் கார்டு, சுற்றுலா கார்டு வசதிகள் உள்ளன. இதில், டிராவல் கார்டுக்கு, 10 சதவீதமும், ட்ரிப் கார்டுக்கு, 20 சதவீதமும் கட்டண சலுகை பெறலாம்.

சுற்றுலா கார்டு, 150 ரூபாய் கொடுத்து வாங்கினால், ஒரு நாளில், எத்தனை முறை வேண்டுமானாலும், பயணம் செய்யலாம். கார்டை, திரும்ப நிலைய கவுன்டரில் கொடுத்தால், 50 ரூபாய் திரும்ப பெறலாம்.

மெட்ரோ ரயில் பயணத்துக்கு, மாதாந்திர சுற்றுலா கார்டு வசதி, நேற்று முதல் அமல்படுத்தப் பட்டுள்ளது. 2,550 ரூபாய் கொடுத்து, சுற்றுலா கார்டு வாங்கினால், 30 நாட்களில், எந்த நிலையத்திலும் ஏறி, எந்த நிலையத்திலும் இறங்கிக் கொள்ளலாம். 30 நாட்கள் முடிந்ததும், கார்டை திரும்ப நிலைய கவுன்டரில் கொடுத்தால், 50 ரூபாய் திரும்ப பெறலாம்.

சுற்றுலா மாதாந்திர கார்டை, கட்டணம் செலுத்தி வாங்கிய பின், எக்காரணம் கொண்டும் ரத்து செய்ய முடியாது. இடையில், ரத்து செய்ய விரும்பினால், கார்டு டிபாசிட் தொகை, 50 ரூபாய் மட்டுமே திரும்ப கிடைக்கும் என, மெட்ரோ நிர்வாகம் தெரிவித்து உள்ளது.